வாரம் - 19 பேசிப் பழகுவோம் எண் - 17

# சொற்கள் , தொடர்கள் அறிமுகம்

## புதிய சூழலும் அதற்குரிய சொற்களும்

ஒவ்வொரு வாரமும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புதிய ஒரு சூழலை அறிமுகப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் எதிர்கொள்கிற சூழல்களை வரிசைப்படுத்தி அவற்றுள் அதிக பயன்பாட்டுடைய சூழலைத் தேர்ந்தெடுக்கவும்

அந்தச் சூழலில் காணப்படுகிற பொருள்கள் , செயல்களின் பெயர்களைப் பட்டியலிடவும்.
சூழலில் பயன்படுகிற பேச்சுகளை வரிசைப்படுத்தி அவற்றை வினாவழியில் விளங்கிக் கொள்வதாக உரையாடல் வழியில் புரிந்து கொள்வதாக முறைபடுத்தவும். எளிய உரையாடல்களை வடிவமைக்கவும்.

இந்த உரையாடல்களை , பேசுவதற்கான தொடர்களை வகுப்பறையில் உரையாடலாக நிகழ்த்திக் காட்டி தமிழில் எவ்வாறு உரையாடுவது என்பதை மாணவர்கள் உள்வாங்கச் செய்யவும்.

**உரையாடல்கள் அயற்சொற்களற்ற தெளிதமிழாகவும் எளிய சொற்களாகவும் , அதிகப் பயன்பாடு உடையதாகவும் வினா விடையில் அமைந்ததாகவும் உருவாக்கவும் .**

# எழுத்து அறிமுகப் பாடல்

அழாமல் இருக்கணும் சின்னப் பாப்பா அ. அ. அ.
ஆடிப்பாடனும் சின்னப் பாப்பா ஆ.... ஆ.... ஆ....
இலையில் சோறு போட்டிட வேண்டும் இ. இ. இ.
ஈ யை நீயும் ஓட்டிட வேண்டும் ஈ.... ஈ.... ஈ....
எங்கும் எதிலும் வென்றிட வேண்டும் எ. எ. எ.
ஏதிலிகளை நாம் மதித்திட வேண்டும் ஏ... ஏ.... ஏ....
ஐயம் இன்றிக் கற்றிட வேண்டும் ஐ. ஐ. ஐ.
ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும் ஒ. ஒ. ஒ.
ஓடி ஓடி உழைத்திட வேண்டும் ஓ.... ஓ.... ஓ....
ஔவை சொல்லை அறிந்திட வேண்டும் ஔ. ஔ. ஔ.

பாடலைப் பாடவைத்து குறில் நெடில் வேறுபாடு உணரச் செய்யவும். பாடலைப் பாடி முடித்ததும் ஒவ்வொரு எழுத்துக்கும் உரிய வரிவடிவங்களைக் காட்டி அறிமுகப்படுத்தவும். ஒவ்வொரு வரியாகப் பாடி அந்த வரியில் ஒலிக்கிற எழுத்தைக் கரும்பலகையில் எழுதிக்காட்வும் .

எங்கு தொடங்குவது எங்கு முடிப்பது என்பதை சுட்டிக்காட்டி மாணவர்கள் எழுத ஊக்குவிக்கவும்.

# வாரம் - 19 பாட வளர்ச்சி

## (அ ஆ இ ஈ எ ஏ ஐ ஒ ஓ ஔ அறிமுகம் செய்தல்)



















மேலுள்ள 10 எழுத்துகளைச் சொல்லுதல்

மேலுள்ள 10 எழுத்துகளை எழுதிக் காட்டுதல்

மேலுள்ள 10 எழுத்துகளைச் செய்தித்தாளில் வட்டமிடுதல்

அட்டையிலுள்ள சொற்களைப் படித்தல்

## வாரம் - 19 எழுத்து அறிவோம்

### மெய்யெழுத்து + உயிரெழுத்து = உயிர்மெய்யெழுத்து

19

க் + ஆ = கா

க் + இ = கி

க் + ஈ = கீ

க் + எ = கெ

க் + ஏ = கே

க் + ஐ = கை

க் + ஒ = கொ

க் + ஓ = கோ

க் + ஔ = கௌ

மேலேயுள்ள ஒன்பது உயிர் எழுத்துகளையும்
முதலில் ஒலிக்கச் செய்தும்
பிறகு உரிய முறையில் எழுத வைத்தும்
பிறகு அடையாளம் கண்டு செய்தித்தாளில் வட்டமிடவும்
மாணவர்களுக்குப் பயிற்சி தரவும் .
அதற்குப்பிறகு உயிர் எழுத்தின் ஒலிப்புடைய
ஒன்பது குறியீடுகளை அறிமுகப்படுத்தி
ஒலிப்புடன் குறியீடுகளை எழுதுமாறு கற்பிக்கவும்.

## குறியீடுகளும் - ஒலிப்பு முறையும்

21

உயிர் மெய்யெழுத்துகள்

| | | | | |
|---|---|---|---|---|
| க் | + | ஆ | = | கா |
| க் | + | இ | = | கி |
| க் | + | ஈ | = | கீ |
| க் | + | எ | = | கெ |
| க் | + | ஏ | = | கே |
| க் | + | ஐ | = | கை |
| க் | + | ஒ | = | கொ |
| க் | + | ஓ | = | கோ |
| க் | + | ஔ | = | கௌ |

உயிரெழுத்துகளுக்குரிய ஒலிப்பு முறையை உள்வாங்கி, உயிரெழுத்துகள் மெய்யெழுத்துகளோடு இணைந்து உருவாகும் உயிர் மெய்யெழுத்துகளில் உள்ள குறியீடுகளை உணர்ந்து, அதற்குரிய ஒலிப்பு முறையை நினைவில் நிறுத்தவும்.

21

குறியீகளும் ஒலிப்பு முறையும்

| | | | |
|---|---|---|---|
| ■ா | — | கா | ஆ |
| ■ி | — | கி | இ |
| ■ீ | — | கீ | ஈ |
| ெ■ | — | கெ | எ |
| ே■ | — | கே | ஏ |
| ை■ | — | கை | ஐ |
| ெ■ா | — | கொ | ஒ |
| ே■ா | — | கோ | ஓ |
| ெ■ள | — | கௌ | ஔ |

உயிர் மெய்யெழுத்துகளை அறிமுகப்படுத்த..

குறியீடுகளை அறிமுகப்படுத்தி, குறியீடுகளுக்குரிய ஒலிப்பு முறையை அறிமுகப்படுத்தி, குறியீடுகளை செய்தித்தாளில் வட்டமிட்டு மீள்பார்வை செய்து, இறுதியாகக் குறியீடுகளை எழுத்துகளோடு பொருத்தி ஒலிக்கப் பயிற்சி தருதல்.
கற்ற எழுத்துகளைச் செய்தித்தாளில் வட்டமிட்டு மீள்பார்வை செய்தல்

குறியீடுகளை அறிமுகப்படுத்தி ,
குறியீடுகளுக்கு உரிய ஒலிப்பு முறையை அறிமுகப்படுத்தி
குறியீடுகளை எழுத்துகளோடு பொருத்தி
ஒலிக்கப் பயிற்சி தரவேண்டும்

# வாரம் - 19

## மாணவர் செயற்பாடு எண் - 1

மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............

கற்றுக்கொண்ட ஒன்பது எழுத்துகளையும் கீழே எழுதவும் . அருகில் குறியீடு எழுதவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 19

## வீட்டு வேலை

மாணவர் பெயர் ......................................... நிலை........... நாள்...............

( கற்றுக்கொண்ட **ஒன்பது** எழுத்துகளையும் கீழே எழுதவும் ) அருகில் குறியீடு எழுதவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |